**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி**

**O.S. No. 40 /2024**

**தேதி : 24.06.2025**

(**வா.சா.1) : திரு.நித்யானந்தம்**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு ஆவணம் தாக்கல் செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி:</u>** நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை கடந்த 05.06.2025 ஆம் தேதி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 18.07.2007 | நானும், எனது தாயார் ஜானகியம்மாளும் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் S.R.O.Copy. |
| வா.சா.ஆ.2 | 27.02.2023 | 1 ஆம் பிரதிவாதி, 2 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த தான ஆவணம் S.R.O.Copy. |
| வா.சா.ஆ.3 | 09.02.2024 | எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய நோட்டிஸ் ரசீதுடன் அலுவலக நகல். |
| வா.சா.ஆ.4 | | நோட்டிசை பெற்றுக் கொண்டதற்கு ஒப்புகை அட்டைகள் (4 எண்ணிக்கை) அசல் |
| வா.சா.ஆ.5 | 16.02.2024 | 1ம் பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பு சார்பு நகல் |
| வா.சா.ஆ.6 | | சிட்டா கணிணி நகல் |
| வா.சா.ஆ.7 | | 3 ஆம் நபர் அபிடவிட் (1 ஆம் பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) |
| வா.சா.ஆ.8 | 14.03.2024 | சர்வே எண்.151/2 ன் வழிகாட்டி மதிப்பு ஆன்லைன் காப்பி கணிணி நகல். |

மேற்படி எனது சாட்சியத்தையும், சான்றாவணங்களையும் ஏற்று வாதிகள் கோரிய பரிகாரங்களை வழக்கி உத்தரவிட வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை :** ( 1ம் பிரதிவாதி தரப்பில்)

எனக்கு பூர்வீகம் சின்ன கலையம்புத்துார் கிராமம் என்றால் சரிதான். தாவா சொத்து சின்ன கலையபுத்துார் கிராமத்தில் தான் உள்ளது என்றால்

சரிதான். தாமோதரன் என்பவரும் அவரது மனைவியும் சின்ன கலைபுத்துார் கிராமத்தில் பஞ்சாயத்து தலைவராக இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் நெருங்கிய உறவினர் என்றால் இல்லை ஒரே ஊர்க்காரர்கள். என் மகள் பெயர் சன்மதி என்றால் சரிதான் அவருக்கு வயது 23 திருமணம் ஆகவில்லை. எனது மகன் பெயர் சூர்யா வயது 18. எனது மகளும், மகனும் தாய்மாமன் பராமரிப்பில் இருந்து வருகிறார்கள். தாய்மாமன் பெயர் வெங்கட்குமார், எனது சொந்த மைத்துனர் என்றால் சரிதான். வெங்கட்குமார் கோயமுத்துாரில் உள்ள செட்டிபாளையத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். எனது மகளும், மகனும் தாய்மாமன் எனது பராமரிப்பில் இருந்து வருகிறார்கள் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி தினேஷ்குமாருக்கு 18.07.2007 ல் சின்ன கலையமுத்துார் கிராமம் சர்வே எண்.151/1 ல் 6 ஏக்கர் 60 செண்ட், சர்வே எண்156/3 ல் 4 ஏக்கர் 48 செண்டும், சர்வே எண்.152/2 3 செண்டும் ரூ.4,00,000/-த்திற்கு நான் எனது தாயார் ஜானகியம்மாள், எனது மகன், மகள் ஆகியோர் கட்டுப்படுத்தி கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான். மற்ற நிலங்களை நானும், எனது தாயார் ஜானகியம்மாளும் எனது மைனர் குழந்தைகளுடன் சேர்ந்து 1 ஆம் பிரதிவாதியின் சகோதரர் கோபால், தாயார் சவிதா ஆகியோருக்கு கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.1 ஆன கிரையப் பத்திரத்தில் எனது மைனர் மகனுக்கும், மகளுக்கும் உண்டான பங்குத் தொகை தலா ரூ.1,00,000/- த்தை அவர்கள் மீது வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கோபால் என்பவருக்கும், சவிதா என்பவருக்கும் எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள கிரையத் தொகையில் அவர்களுக்குண்டான பங்குகளை வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். தினேஷ்குமார் கிரையம் செய்து கொடுத்த பிறகு அவரிடம் நான் பணம் கேட்டுச் சென்றேன் என்றால் சரியல்ல. தினேஷ்குமார் பணம் கொடுக்க மறுத்ததால் அந்த பூமியில் பாகம் இருக்கிறது என்று சொல்லி திண்டுக்கல் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.127/2013 ல் சன்மதி, சூர்யா மூலம் எனது மைத்துனர் வெங்கட் குமாரை வைத்து பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனது அம்மா ஜானகியம்மாள் 1 ஆம் பிரதிவாதி என்றாலும், நான் 2 ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி வழக்கில்

நாங்கள் ஆஜராகததால் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் கோபால், சவிதா, 1 ஆம் பிரதிவாதி தினேஷ்குமார் மற்றும் ராஜ சேகர் பிரதிவாதிகள் ஆவார்கள். விசாரணைக்கு போட்ட பிறகு மேற்படி வழக்கு 20.11.2015 ஆம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புரை அசல் பி.வா.சா.ஆ.1 ஆகவும் தீர்ப்பாணை அசல் பி.வா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டு CMP (MD) NO.47902 /2024 என்ற எண்ணில் நிலுவையில் இருந்து வருகிறது என்ற விபரம் எனக்கு தெரியும். 20.11.2015 ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையின் மீது 2024 ல் தான் 9 வருடங்கள் கழித்து மேல்முறையீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் அ.வ.எண்.127/2013 தினேஷ்குமாரிடமிருந்து பணம் பறிக்கும் நோக்கத்துடன் எனது மைத்துனர் மூலமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளது பற்றி எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.1 ல் 1 வது அயிட்டத்திற்கு கிழக்கு மாலாக சர்வே எண்.151/2 ல் தென்வடல் பாதை என்று சொல்லியுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.151/2 ல் குறிப்பிட்ட நான்கு மால்களும் 3 செண்டு நிலம் 1 ஆம் பிரதிவாதியின் நிலங்களுக்கு செல்வதற்கு வண்டிப் பாதைக்காக எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 3 செண்ட் நிலத்தில் வடபுறமும், தென்புறத்திலும் என் நிலம் உள்ளது என்றால் சரிதான். 3 செண்ட் வண்டிப்பாதை நிலத்திற்கு கிழக்கு மாலாக நெய்க்காரப்பட்டி ரோட்டில் இருந்து சர்வே எண்.97, 98 ல் மேற்கே சர்வே எண்.151/1 வரை பாதை உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.151/2 நிலம் 3 செண்ட் கூட்டுப் பட்டாவில் உள்ளது. சர்வே எண்.97 ல் உள்ளது உள்ளது என்னுடைய நிலம். சர்வே எண்.98 ல் உள்ளது பஞ்சாயத்து ரோடு. கிழமேல் ரோட்டை ஒட்டி வடபுறம் தான் எனது வீடு உள்ளது என்றால் சரியல்ல. 3 செண்ட் ஒட்டி தென்புறம் காம்ப்ளக்ஸ் உள்ளதா என்றால் எனது சொந்த இடத்தில் சர்வே எண்.151/3 ல் உள்ளது. சர்வே எண்.151/2 ல் உள்ள வண்டிப்பாதை வழியாகத்தான் தென்புறத்தில் உள்ள எனது மற்றொரு குடியிருப்பு வீட்டிற்கு செல்வேன் என்றால் இல்லை. இந்த வழக்கில் 1 ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வாத உரை பற்றி எனக்கு தெரியும். 2 முதல் 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரைப் பற்றி எனக்குத் தெரியும்.

(2ம் பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

ஒம்/– S.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.